**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த அரசாங்கம் எப்போதும் மனிதாபிமானத்தோடு நடந்துகொள்கிற அரசாங்கம்தான்.

**திரு. எம். எஸ். மணி :** தொழுநோய் உள்ள கைதிகளைச் சிறைச் சாலையில் வைப்பதற்குப் பதிலாக தொழுநோய் பற்றிக்கொண்டவர் களுக்காக உள்ள தனி விடுதியில் வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுது சிறைச்சாலையிலே அவர்களுக்குத் தனியாக இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**கோயம்புத்தூர் மத்திய சிறையில் குடிநீர்ப் பற்றுக்குறை.**

*** 646 வினா—திரு. எம். பூபதி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மத்திய சிறையில் கோடை காலங்களில் குடிநீர் பற்றுக்குறை ஒவ்வொரு ஆண்டும் ஏற்பட்டு வருவதைச் சமாளிக்க அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கோவை மத்திய சிறைக்குத் தேவைப்படும் தண்ணீரை நகராட்சி வழங்கும் தண்ணீர் குழாய் மூலம் பெறுவதோடு அல்லாமல் லாரிகள் மூலமும் பெறப்படுகிறது. மேலும், தண்ணீர் வசதியை அதிகப்படுத்துவதற்காக நான்கு அதிகப்படியான குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. அவைகளில் இரண்டில் பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டு வருகின்றன. மேலும் தோட்ட வேலைகளுக்குப் பயன்பட்டு வந்த குழாய்க் கிணறு ஒன்றும் கைதிகள் உபயோகத்திற்காக திருப்பப் பட்டிருக்கிறது. இந்த சிறையில் மற்றவிடங்களில் அதிகப்படியான குழாய்க் கிணறுகள் வைப்பதுபற்றியும் தற்போது இருந்து வரும் நகராட்சி தண்ணீர் வழங்கும் நெருக் குழாய்க்கு பதில் பெரிய குழாய் அமைப்பது பற்றியும் யோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, 12 ஆண்டுகளுக்கு முன்பே கோவை மத்திய சிறையில் பெரிய குழாய் போடப்பட்டுள்ளது. வேண்டிய அளவுக்குத் தண்ணீர் விநியோகம் இல்லை. குறைவாகத் தான் இருக்கிறது என்று அதிகாரிகள் பலமுறைகள் ரிப்போர்ட் செய்திருந்தும் இன்னும் போதுமான அளவுக்குத் தண்ணீர் சப்ளை செய்யவில்லையென்பதை அரசாங்கம் அறியுமா ? வேண்டிய, தக்க நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கோவைச் சிறைச்சாலையிலே தண்ணீர் பற்றுக்குறை இருப்பது உண்மை. அதைப் போக்கு வதற்குத்தான் அந்த முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டு இருக்கின்றன.